**தலைப்பு 281 – கமநல அபிவிருத்தி திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை.**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல், தொடர்பான பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 281 – கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 18 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.21 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் அட்டவணையில் பொழிப்பாக்கித் தரப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார்கள் எனபது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப் பொறுப்பு. | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஒழுங்கு விதிகளுடன் இணங்கி நடக்காமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 128(1) (அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத்தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1 | செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாகத் தயாரிக்கப்படாமை | 2.3.1 |
| | | 2. | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அடைந்து கொள்ளப்படாமை | 2.3.2 (ஆ) |
| | | 3. | பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.4 |
| | | 4. | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.8 |
| | | 5. | பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை | 2.18 |
| 128(1) (ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் | 1. | பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.4 |
| | | 2. | பொது மக்களுக்கான கோவைகளை நிறைவேற்றுவதிலுள்ள குறைபாடுகள் | 2.11 |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடனடியாகவும் சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்கானிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | | | |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும். | 1. | பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை | 2.17 |
| | | 2. | இணக்கமின்மை | 2.18 |
| 128(1) (ஈ) | பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.13 |
| 128(1) (உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வு செய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும், | 1. | சொத்துக்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.4 |
| | | 2. | வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.4(ஊ) |
| 128 (1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது | 1. | செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாகத் தயாரிக்கப்படாமை | 2.2.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | திறைசேரியால் வேண்டப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் மற்றும் அறிக்கைகளை சரியான வேளையில் சமர்ப்பிப்பதாகவும் | 2. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமை | 2.2.3 |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிலுள்ள நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்தல் | 2.13(அ) |
| 128(1) (ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பாத்த சிக்கனம், விளைதிறன், ஒழுங்குமுறை, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையான கவனத்துடன் தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது | 1 | எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றுக் கொள்ளாமை | 2.2.2 (ஆ) |
| | | 2 | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.7 |
| 128(1) (ஙு) | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடைமுறையிலுள்ள கட்டளைகளுக்கும் அறிவித்தல்களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றனர் எனவும், | | உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகளைப் பெற்றுக்கொள்றுவதிலுள்ள குறைபாடுகள் | 2.21 |
| 128(1) (ச) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்கள் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடகளை கணக்கீடு உத்தியோகத்தர்களினால் பின்னற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு | | பொறுப்பேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல் | 2.4(ஏ) |

வாய்ந்த உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும்,

## 2 பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்

(அ) அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகளுக்கு இணங்க விவசாயக் காணிகளை ஈடுபடுத்துவதற்குரிய ஒழுங்கு விதிகளைத் திட்டமிடல்.

(ஆ) விவசாயக் காணி உரிமையாளர்கள், விவசாயகாணிகளுக்குச் சொந்தமான விவசாயிகள், காணி உரிமையாளர்கள் மற்றும் குத்தகை விவசாயிகளின் பயிர்ச் செய்கை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒழுங்கு விதிகளை அமுல்ப்படுத்துதல்.

(இ) விவசாய அமைப்புக்களைப் பதிவு செய்தல் மற்றும் செயற்படுத்துதல் சம்பந்தமான கட்டளைகளைத் தயாரித்தலும் அந்த ஒழுங்கு விதிகள் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதலும்,

(ஈ) கமநல அபிவிருத்திச் சபைகளைத் தோற்றுவித்தலும் அவற்றின் அதிகாரங்களை அமுல்படுத்துவதற்காக வழிகாட்டுதலும் மேற்பார்வை செய்தலும்,

(உ) நாடு முழுவதும் செயற்படுகின்ற அனைத்து கமநல அபிவிருத்திச் சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய விவசாயக் காணிகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி விவசாயக் காணிகளின் பெயர்ப் பதிவேட்டினைத் தயாரித்து திருத்தங்கள் செய்து செயற்படுத்துதல்.

(ஊ) விவசாயக் காணிகளுக்குரிய குத்தகை விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் ஏனைய விவசாயிகளின் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்.

(எ) சிறு நீர்ப்பாசன கைத்தொழில் மற்றும் நீர் மூலங்களின் வினைத்திறன் பாதுகாப்பு, பேணிக்காத்தல், மற்றும் முகாமைத்துவத்திற்குரிய ஒழுங்கு விதிகளை அமுல்ப்படுத்துதல்.

(ஏ) விவசாய அபிவிருத்தி அதிகாரச் சட்டங்களையும் அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகளையும் மீறி அமுல்படுத்துகின்ற தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.

### 2.2 செயலாற்றல்

### 2.2 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. செயல் நடவடிக்கைத் திட்டம் சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தாபனக் கட்டமைப்பு, அங்கீகரித்த பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் என்பன தொடர்பான விபரம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் கமநல சேவை நிலையங்களின் புதிய நிர்மாணங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களைத் திருத்தம் செய்வதின் கீழ் ரூபா 23,702,110 செலவில் மேற்கொள்ளப்பட்ட 10 செயற்திட்டங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

கமநல சேவை நிலையங்களைத் திருத்தம் செய்வதின் கீழ் 06 செயற்திட்டங்களுக்காகவும் மாவட்ட அலுவலகங்களைத் திருத்தம் செய்வதன் கீழ் 04 செயற்திட்டங்களுக்காகவும் மற்றும் புதிய நிர்மாணங்களின் கீழ் களுத்துறை மாவட்டத்திற்கான திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமும் ரூபா 27 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 யூன் 30 ஆந் திகதி வரையும் அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை (Out come) பெற்றுக்கொள்ளாமை**

மீளாய்வாண்டில் சிறிய குளங்களை புனரமைத்தல் மற்றும் புனர் நிர்மாணித்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் 04 செயற்பாடுகளின் கீழ் 558 குளங்களுக்காக ரூபா 918 மில்லியனும் சிறு நீர்ப்பாசனம் மற்றும் கைவிடப்பட்ட வயல் காணிகளை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் 04 செயற்பாடுகளின் கீழ் 500 அணைக் கட்டுக்களுக்காக ரூபா 593 மில்லியன் நிதி ஏற்பாடும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் முறையே 247 குளங்களினதும் 235 அனைக்கட்டுக்களினதும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 965.1 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 311 குளங்களினதும் 265 அணைக்கட்டுக்களினதும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிதி விடுவிக்கப்பட்டிருந்தும் வேலை முடிவுறுத்தப்படாத செயற்திட்டங்கள்**

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் தொடர்பாக மாவட்ட செயலத்திற்கு நிதி விடுவிக்கப்பட்டிருந்தும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வேலை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு

(i) மீளாய்வாண்டில் சிறிய குளங்களைப் புனரமைத்தல் மற்றும் புனர் நிர்மாணித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1,184 செயற்திட்டங்களுக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 627,155,011 செலவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் இச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் சிறு நீர்ப்பாசனம் மற்றும் கைவிடப்பட்ட வயல் காணிகளை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 437 செயற்திட்டங்களுக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 164,904,313 செலவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் இச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டில் பயிர்களை பல் வகைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 628 செயற்திட்டங்களுக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,500,000 செலவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது இச் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டில் கமநல சேவை நிலையங்களைத் திருத்தம் செய்தலின் கீழ் 15 செயற்திட்டங்களுக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,945,629

செலவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது இச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்**

**2.3.1 பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீரை அளக்கும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2017 திசெம்பர் 26 ஆந் திகதி ரூபா 700,000 செலுத்தப்பட்டிருந்தும் அப்பொருட்கள் 2018 ஆம் ஆண்டிலே நிறுவனத்திற்கு கிடைத்திருந்தது. எவ்வாறாயினும், அப்பொருட்கள் 2017 ஆம் ஆண்டிலே கிடைத்தாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.11 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களுக்கு மாத்திரம் வரி செலுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 740,025 பெறுமதியான பாதைகளை அச்சிடும் போது இன்வொயிஸில் பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்யப்படாத வழங்குனர்களுக்கு ரூபா 96,525 தொகை பெறுமதி சேர் வரியாகச் செலுத்தப்பட்டிருந்தது..

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) சொத்துக்களை பதிவேடுகளில் பதிதல்**

2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழுள்ள கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்தால் அனைத்து நிறுவனங்களினதும் சொத்துக்கள் சம்பந்தமான தகவல்கள் கோரப்பட்டிருந்தும் திணைக்களத்தால் அத்தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படாமை**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்தின் 158 வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது எரிபொருள் நுகர்வு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) அலுவலகத்தை செயற்படுத்தும் செலவுகள்**

அலுவலகத்தை துப்பரவு செய்யும் கட்டணம் ரூபா 14,313,795 தொகையும் பாதுகாப்புச் சேவைக் கட்டணம் ரூபா 8,229,800 தொகையும் வீத வரிக்கட்டணம் ரூபா 924,244 தொகையுமாக மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் அனைத்து கட்டிடங்களுக்குமாக ரூபா 23,467,839 செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு தனிநபருக்கான அலுவலகத்தை செயற்படுத்தும் செலவு ரூபா 1,665 ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. பாதுகாப்புச் சேவை உடன்படிக்கையின் 05 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தரை 24 மணித்தியாலங்களை விட மிகையாக சேவையில் ஈடுபடுத்தலாகாது எனக் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக 03 உத்தியோகத்தர்கள் 84 மணித்தியாலங்களிலிருந்து 240 மணித்தியாலங்கள் வரையான கால வீச்சில் 11 சந்தர்ப்பங்களின் போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

ii. துப்பரவு செய்தல் சேவை உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு நாளைக்கு இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ஊழியர்களின் எண்ணிக்கை 09 நபர்களான இருந்த போதிலும் யூலை மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை நிர்ணயிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை விடக் குறைவாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 77,698 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய சொத்துக்கள் விற்றுத் தீர்க்கப்படாமை**

வருடாந்தம் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலாமாக விற்றுத் தீர்க்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட எக்ஸ்கவேட்டர் இயந்திரம், 09 புல்டோசர்கள், 02 டோசர்கள், 01 வயிப்ரேடிங் ரோலர்கள், ரூபா 15,300,000 கிரயமான 12 வாகனங்கள் என்பவற்றை 2018 யூலை 31 ஆந் திகதி வரை விற்றுத்தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | பயன்படுத்தாது காணப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா. | (ஆண்டு) |
| i. | எக்ஸ்கவேட்டர் | 01 | - | 01 |
| ii. | புல்டோசர் | 06 | - | 01 |
| iii. | வயிப்ரேடிங் ரோலர் | 02 | - | 01 |
| iv. | லோடர் | 01 | - | 01 |
| v. | இயந்திரங்கள் | 13 | - | 01 ஆண்டு 07 மாதங்கள் |
| vi. | வாகனங்கள் | 08 | 24,300,000 | 01 |

**(ஊ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 05 மாவட்ட அலுவலகங்கள் மீளாய்வாண்டில் வருடாந்தம் பொருள் மெய்மையாய்வு அறிக்கையை 2018 செப்தெம்பர் 12 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

**(எ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்திற்குச் சொந்தமான 03 வாகனங்கள் பிரதேச செயலாளர், தென் மாகாணம், விவசாய அமைச்சு, ஹுனுபிட்டிய பசளை செயலகம் என்பவற்றிற்கு ஒரு ஆண்டிற்கு அதிக காலத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதனை ஒப்படைப்பதற்கு அல்லது மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்.**

(i) விவசாய அமைச்சின் 03 வாகனங்களும், உலக உணவு செயற்திட்டத்தின் 03 வாகனங்களும், யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் விவசாயத் திணைக்களங்களின் 02 வாகனங்களும், மாத்தறை மாவட்ட செயலகத்தின் 01 வாகனமும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 01 வாகனமும் பொறுப்பேற்கப்படாது ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ii) உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தால் சுனாமி உதவியின் கீழ் திணைக்களத்திற்கு 2011 ஆம் ஆண்டின் போது கிடைத்த ப்ரோடோ ஜீப் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் அது மாலபே வாகனப் பிரிவில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**2.5 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்**

**வருடாந்த பாதீட்டு எல்லையை மிகைத்து கடப்பாடுகளுக்கு உட்படுதல்**

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 02 (அ) பந்திக்கு இணக்கமற்ற வகையில் 06 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 61.13 மில்லியன் நிதி ஏற்பாடானது ரூபா 12.81 மில்லியனால் மிகைத்து ரூபா 14.59 மில்லியன் கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது.

**2.6 நிதி ஒழுங்கீனத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மீகஸ்ஆர கமநல சேவை குழுவின் ஒரு உத்தியோகத்தரால் 2008 ஆம் ஆண்டின் போது பணத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தி ரூபா 320,700 பணம் குறைவாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இப் பணத்தில் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 122,000 மாத்திரம் குழுவிடம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

(அ) 2017 ஏப்ரல் மாதம் 07 மற்றும் 08 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்ட புத்தரிசி விழாவிற்கான ஞாபகார்த்த சஞ்சிகை விழா முடிவடைந்து 20 நாட்களின் பின்னரும்

அழைப்பிதழ் பத்திரங்கள் 38 நாட்களுக்குப் பின்னரும் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 532,182 ஆகும்.

(ஆ) 2017 ஒக்தோபர் 06 ஆந் திகதியிலிருந்து 2017 ஒக்தோபர் 12 ஆந் திகதி வரையான காலத்துள் அமுல்ப்படுத்தப்பட்ட விவசாயிகள் வாரம் தொடர்பாக விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தும் எதிர்பார்ப்புடன் பதாதைகளை அச்சிடுவதற்கு 2017 ஒக்தோபர் 02 ஆந் திகதி ஒரு கட்டளை வழங்கப்பட்டிருந்தும் விவசாயிகள் வாரம் முடிவடைந்து ஒரு மாதத்தின் பின்னர் அதாவது 2017 நவம்பர் 07 ஆந் திகதி பதாதைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 740,025 ஆகும்.

**2.8 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

திணைக்களம் தொடர்பாக 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக திணைக்களத்தால் நிவர்த்தி செய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு<br>பந்தி இலக்கம் | தொடர்புபட்ட விடயம் |
|---|---|
| 3.13 | கெகிராவ பிராந்திய அபிவிருத்தி வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 450,000 பணத்தை முன்னாள் கமநல பிராந்திய உத்தியோகத்தர் தனது தனிப்பட்ட கணக்கிற்கு செலவு வைத்தமை. |
| 3.15 (ஆ) | பலாங்கொடை ரத்மலவின்ன கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்ற பசளை மோசடி சம்பந்தமாக 09 விவசாய உற்பத்தி உதவியாளர்கள் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட புலனாய்வு நடவடிக்கைகள் 2016 யூன் 27 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் ரூபா 1,667,250 தொகையான இருப்பு பற்றாக்குறைகள் அறவீடு செய்யப்படாமை. |
| 3.15 (உ) | சோளகம் பயிரிட்ட 5,386 விவசாயிகளுக்காக கடன் வழங்குவதற்கு 2015 ஆம் ஆண்டின் போது விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட கடன் பணத்திலிருந்து ரூபா 35,385,267 தீர்த்து வைக்கப்படாமை. |
| 3.15 (எ) | அனுராதபுரம் கல்லங்கிய கமநல சேவை நிலையத்தின் உத்தியோகத்தர்களின் நிதி ஒழுங்கீனத்தின் காரணமாக இடம்பெற்ற ரூபா 364,111 தொகையான நிதி மற்றும் இருப்பு பற்றாக்குறை அறவீடு செய்யப்படாமை. |

## 2.9 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் பசளை முறைகேடுகள் மற்றும் நிதி முறைகேடுகள் சம்பந்தமாக 12 தொடக்க புலனாய்வுகளையும் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் 04 விசாரணைகளையும் மற்றும் முறைப்படியான 03 ஒழுக்காற்று விசாரணைகளையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10 கமநல சேவை நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட நிதிப் பிரமாணம் 104(1) (ஆ) இன் படியான விசாரனைகளுக்கு இணங்க நிதி முறைகேடுகள், நிவாரணப் பசளை இருப்பு, ஏனைய இருப்பு பற்றாக்குறைகள் என்பன சம்பந்தமாக 24 உத்தியோகத்தர்களிடமிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய ரூபா 8,560,108 தொகையை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விவசாய வங்கியின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 9,626,886,464 தொகையான 13 கடன் வகைகள் சம்பந்தமாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,428,462,224 பணம் அறவிட வேண்டியிருந்தது.

(ஈ) விவசாய அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட 2016 மார்ச் 09 ஆந் திகதிய 2016/NFS/FCG(1) ஆம் இலக்க சுற்றிக்கையின் 6.3 மற்றும் 6.4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நாட்டிலுள்ள அனைத்து கமநல சேவை நிலையங்களும் 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 239,272,318 பெறுமதியான பசளை நிவாரண முறைமையின் கீழ் எஞ்சியுள்ள இருப்புக்கான 2016 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் விற்பனை செய்து அரசாங்கத்தின் கணக்கிற்குச் செலவு வைக்குமாறு காட்டப்பட்டிருந்த போதிலும் 93,830 கிலோகிராம் பசளை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் விற்பனை செய்யப்படாதிருந்ததுடன் பசளைகளை விற்பனை செய்ததன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 207,741,350 பணம் கமநல சேவை குழுக்களின் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்திற்குச் சொந்தமான கமநல சேவை நிலையங்களில் இருந்த ரூபா 58,229,685 பெறுமதியான பசளை இருப்புக்கள் கடன் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரை அப்பணத்தை அறவிட்டு அரசாங்கத்தின் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்திற்காக ஒரு இணைய தளம் 2011 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் பொது மக்களுக்கு தேவையான தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்படாததுடன் பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஒக்தோபர் 20 ஆந் திகதிய 24/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கழிவுப் பொருள் முகாமைத்துவம் சம்பந்தமாக கழிவுப் பொருள் தோற்றுவிக்கப்படும் இடங்களில் முறைப்படி பிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை, கழிவுப் பொருட்களைப் பேணுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்ணங்களுடனான குப்பைத் தொட்டிகள்

உருவாக்கப்பட்டமை நிறுவனத்துள் பொலித்தீன் பயன்பாட்டை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை ஆகிய செயற்பாடுகள் இடம் பெற்றிருக்கவில்லை.

### 2.11 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக திணைகளத்தால் தமது நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களும் இலக்குகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.12 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டு காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 3,722.78 | 3,719.21 | 3.57 | 0.09 |
| | மூலதனம் | 655.27 | 600.17 | 55.09 | 8.4 |
| | மொத்தம் | 4,378.05 | 4,319.38 | 58.67 | 1.34 |
| 2014 | மீண்டுவருபவை | 4,434.74 | 4,430.07 | 4.67 | 0.11 |
| | மூலதனம் | 2,040.00 | 2,007.77 | 32.23 | 1.57 |
| | மொத்தம் | 6,474.74 | 6,437.84 | 36.89 | 0.56 |
| 2015 | மீண்டுவருபவை | 6,076.09 | 5,988.42 | 87.67 | 1.44 |
| | மூலதனம் | 2,086.00 | 1843.57 | 242.43 | 11.62 |
| | மொத்தம் | 8,162.09 | 7,831.99 | 330.10 | 4.04 |
| 2016 | மீண்டுவருபவை | 6,920.40 | 6,676.10 | 244.30 | 3.53 |
| | மூலதனம் | 1,663.00 | 914.22 | 748.78 | 45.03 |
| | மொத்தம் | 8,583.00 | 7,590.22 | 992.78 | 11.57 |
| 2017 | மீண்டுவருபவை | 6,752.17 | 6,698.85 | 53.32 | 0.79 |
| | மூலதனம் | 1,881.68 | 869.04 | 1,012.64 | 53.80 |
| | மொத்தம் | 8,633.86 | 7,567.89 | 1,065.97 | 12.34 |

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மிகை நிதி ஏற்பாட்டினை வழங்குதல்**

03 செலவு விடயங்களுக்காக ரூபா 154 மில்லியன் கூட்டு மொத்தமான மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக அச் செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 47 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன் காரணமாக வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்பு 36 சதவீதத்திலிருந்து 78 சதவீதம் வரையான வீச்சுடைய அளவில் காணப்பட்டது.

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்.**

02 அமைச்சுக்கள் 02 திணைக்களங்கள் மற்றும் சனாதிபதி செயலகத்தால் செயற்பாடுகளுக்காக முறையே 4,915 மில்லியன் ரூபா 557 மில்லியன் மற்றும் ரூபா 2.08 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றில் ரூபா 1995.49 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 2,977.29 மில்லியன் அல்லது 60 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- விவசாய அமைச்சின் மூலம் மாத்தளை மாவட்டத்தில் சிறு நிர்ப்பாசனங்களை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளுக்கான 11 வேலைகளுக்காக ரூபா 23,263,000 மொத்த தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அவை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- விவசாய அமைச்சினால் திணைக்களத்திற்கு கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 30 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் 200 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு 30 கணனிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 மே 08 ஆந் திகதியிலிருந்து எஞ்சிய 170 கணனிகள் களஞ்சியத்தில் காணப்பட்டன. இக் கணனிகளுக்கு மென்பொருள் வழங்கப்பட்டிருக்காமையின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்தது.

**2.13 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 281011 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 285.00 | 284.19 | 192.00 | 234.46 | 600.00 | 407.06 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவீடு செய்யாமை.

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்ககூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்த தொகையானது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியைத் தவிர்த்து ரூபா 7,733,398 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகள் 05 ஆண்டுகள் காலமாகக் காணப்பட்டு வருகின்ற போதிலும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமாக நிலையில் காணப்பட்டது.

(ஆ) உள்ளக இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதியாக ரூபா 2,021,473 காட்டப்பட்டிருந்ததுடன் அக்கடன் மீதியினுள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் ரூபா 1,991,743 மீதியும் உள்ளது.

## 2.14 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள கட்டுநிதிக் கணக்கின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 323,819 ஆகும். இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்கூறிய கட்டு நிதி மீதிகளில் ரூபா 500,800 தொகையானது 2018 யூன் 05 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) இன் இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொண்ட செயல் நிமித்த கட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 26 உத்தியோகத்தர்களுக்கு 182 சந்தர்ப்பங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட ரூபா 2,255,208 மொத்த தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதியானது செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு 33 நாட்களிலிருந்து 355 நாட்கள் வரையான கால வீச்சுடைய தாமதத்தில் தீர்த்து வைக்கப்பட்டிருந்தன.

(இ) ஏற்கெனவே பெற்றுக் கொண்ட செயல் நிமித்த உப கட்டு நிதி தீர்த்து வைக்கப்படாதிருந்தும் மேலும், ரூபா 3,526,232 மொத்த தொகையான செயல் நிமித்த உப கட்டு நிதி 25 உத்தியோகத்தர்களுக்கு 242 சந்தர்ப்பங்களின் பொது வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதிப் பிரமாணம் 371 (6) இன் பிரகாரம் ஏதாவது நிதி ஆண்டில் குறிப்பிட்ட கட்டுநிதியாக வழங்கப்பட்ட பண மற்றுமொரு நிதி ஆண்டிற்குரிய கொடுப்பனவிற்காக ஈடுபடுத்தலாகாது என்ற போதிலும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் 2017 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட ரூபா 218,330 தொகையான முற்பணங்கள் 2018 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க தாமத காலம் 17 நாட்களிலிருந்து 216 நாட்களாகும்.

(உ) 8 உத்தியோகத்தர்களுக்கு 10 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 151,430 செயல் நிமித்த கட்டு நிதி உரிய செயற்பாட்டை மேற்கொள்ளாது 9 நாட்களிலிருந்து 321 நாட்கள் வரையான காலம் கையில் வைத்திருந்து பின்னர் முழுப் பணமும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

**2.15 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ் 07 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் மொத்தம் ரூபா 500 மில்லியனாகும். அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 35.97 மில்லியன் மொத்த தொகையான 954 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டில் கமநல சேவை நிலையங்களுக்காக பசளை நிவாரணம் தொடர்பாக வழங்கப்பட்ட முற்பணங்களில் 2015 இலிருந்து 2017 வரையான ஆண்டுகளில் தீர்த்து வைக்கப்பட்ட ரூபா 48.85 மில்லியன் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்காக 2015 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தில் அரசாங்கத்தின் கணக்கிற்குச் செலவு வைத்து எஞ்சியுள்ள ரூபா 0.14 மில்லியன் தீர்த்து வைக்கப்படாது 2018 மே 30 ஆந் திகதி வரை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை புத்தரிசி விழாவிற்காகச் செலவு செய்வதற்கு பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்த ரூபா 1.45 மில்லியன் பணம் பயன்படுத்தப்படாது விவசாய அமைச்சிடமிருந்து நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக் கொண்டு அவ்விழாவிற்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் 04 வைப்புக் கணக்குகளின் மீதியானது திறைசேரி ஏடுகளுக்கும் திணைக்கள ஏடுகளுக்குமிடையே ரூபா 1.15 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**2.16 வங்கி கணக்குகளின் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 3.026 மொத்தப் பெறுமதியான 248 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 396 (இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 9 மாவட்ட அலுவலகங்களின் இனங்காணப்படாத ரூபா 571,858 கொடுப்பனவுகள் மற்றும் 07 மாவட்ட அலுவலகங்களின் ரூபா 532,529 தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்கண்டு செம்மையாக்கியிருக்கவில்லை.

**2.17 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
| --- | --- | --- |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) II ஆம் அலகு | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| கணனி, துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பிணைப்பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| வாகனங்களை பட்டியல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647 (ஈ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| சம்பவக் குறிப்பு புத்தகம் | நிதிப்பிரமாணம் 1645 | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.18 இணக்கமின்மைகள்**

**2.18.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | **ரூபா** | |
| **நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | | |
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 53(1) மற்றும் (4) ஆம் பிரிவுகள். | - | விவசாயக் காணிப் பதிவேடுகளைத் தயாரிக்கும் பொறுப்பு திணைக்கத்திற்குரியதாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணங்கள் 1646 | 31,617,210 | வாகனங்களின் பயணம் தொடர்பான மாதாந்தம் பொழிப்பின் மூலப் பரதியுடன் குறித்த மாத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் தகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட வேண்டிய போதிலும் 133 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 செப்தெம்பர் 08 ஆந் திகதிய MNPEA 3/2016 (திருத்திய) ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சுற்றிக்கை | - | போட்டித்தன்மை இல்லாது ஒரு ஒப்பந்தம் வழங்கப்படுகையில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் விவசாய அமைப்புக்களாக 2 ஆண்டுகளுக்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 2017 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மாத்தளை மாவட்டத்தின் 4 விவசாய அமைப்புக்களுக்கு 5 நிர்மாண வேலைகள் வழங்கப்பட்டிருந்தன. |

**2.19 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**2.19.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரித்த, உள்ளபடியான, மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுவதுடன் மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தின் ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 6,410.85 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க தனிநபருக்கான செலவு ரூபா 454,832 ஆகும்.

| **ஊழியர் வகை** | | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 123 | 70 | 53 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 645 | 466 | 179 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 16,065 | 12,976 | 3,089 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 1,543 | 583 | 960 |
| | **மொத்தம்** | **18,385** | **14,095** | **4,281** |

**(அ) முறையற்ற வகையில் ஏனைய திணைக்களங்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 08 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் 04 நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். சப்ரகமுவ மாகாண சபைக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக 2016 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2017 செப்தெம்பர் 26 ஆந் திகதி வரை கிடைக்க வேண்டிய ரூபா 326,736 சம்பளத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பதவியணியினரரைப் பயிற்றுவித்தல்**

மீளாய்வாண்டின் போது ரூபா 184,145 செலவு செய்து திணைக்களத்திள் 165 உத்தியோகத்தர்களுக்கு விவசாயக் காணிப் பதிவேடுகளை நாளது வரையாக்குவது தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டிருந்தும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் விவசாயக் காணிப் பதிவேடுகள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**2.20 அரசாங்க உத்தியோத்தர்களுக்காகப் பிணைவைத்தல்**

நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய போதிலும் இத் திணைக்களத்தின் 9,540 உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை.